# டைம்ஸ் ஆஃப் ரிபப்ளிக்

# TOR TIMES OF REPUBLIC

VOICE OF TAMILNADU


| பிப்ரவரி 2025 | மலர் -03 | இதழ் - 11 | தமிழ் மாத இதழ் | விலை ரூ.30/- |
|---|---|---|---|---|
| February 2025 | Volume - 03 | Issue - 11 | Tamil Monthly | Price Rs. 30/- |




## தவெக தலைவர் விஜய் அரசியல் பயணம்

## NEP 2025
## தமிழ்நாட்டின் கல்விப் போராட்டம் உரிமையா? கட்டுப்படுத்தலா?




**SRI MEENAKSHI TEXTILES**
No. 2/3, Singara Garden 3rd Lane, Old Washermenpet , Chennai - 600021.
S . SHANMUGAVEL - Mob : 95004 66660, 91156 66777 : 044 - 2596 9679.



# தவெக தலைவர் விஜய் அரசியல் பயணம்

## - 2026 தேர்தலுக்கான வெற்றி திட்டம்!





தமிழ் சினிமாவின் முன்னணி நடிகராக இருந்த விஜய், தனது அரசியல் பிரவேசத்தால் கடந்த ஒரு ஆண்டில் மிகப்பெரிய அரசியல் விவாதங்களுக்கு இடமளித்துள்ளார். 2024-ம் ஆண்டு தமிழ்நாடு வெற்றி கழகம் (**TVK**) எனும் தனது அரசியல் கட்சியை தொடங்கி, மக்கள் ஆதரவை பெற்றுவந்த விஜய், பிப்ரவரி 2025-ல் புதிய மைல்கற்களை அடைந்துள்ளார். இந்த மாதம் அவரது அரசியல் பயணத்தில் முக்கியமானதாக அமைந்துள்ளது, ஏனெனில் பல பிரபல அரசியல் தலைவர் சந்திப்புகள், மக்கள் மேடைகளில் உரைகள் மற்றும் எதிர்க்கட்சிகளின் விமர்சனங்கள் இடம்பெற்றன.

### பிப்ரவரி 2025-தவெக- வின் புதிய தொடக்கம்!

**TVK** தொடங்கி ஒரு ஆண்டை கடந்துவிட்ட நிலையில், தவெக கட்சி தனது வளர்ச்சியை மக்களிடம் விளக்க பெரும் பொதுக்கூட்டம் நடத்தியது. இதில் விஜய் மற்றும் பிரஷாந்த் கிஷோர் ஒரே மேடையில் தோன்றினர், அரசியல் வட்டாரங்களில் இது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

இந்தக் கூட்டத்தில் விஜய், "இது சாதாரணமான அரசியல் கட்சி அல்ல, மாற்றத்திற்கான இயக்கம்" என்று **TVK**-வின் நோக்கத்தை வெளிப்படுத்தினார். நிகழ்வின் முக்கிய அம்சமாக **TVK**-வின் சமூக மற்றும் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களை அவர் விளக்கி இருந்தார். (பிப்ரவரி 26,2025) அன்று மகாபலிபுரத்தில் நடைபெற்ற 2 ஆம் ஆண்டு தொடக்க விழாவில் தவெக தலைவர் விஜய் முக்கியமான அறிவிப்புகளை வெளியிட்டார். தமிழ்நாட்டில் அரசியல் மாற்றம் அவசியம். 1967, 1977 தேர்தல்களில் மக்கள் மாற்றத்தை உருவாக்கினர்; 2026-இல் நாம் புதிய அரசியல் யுகத்தை தொடங்க வேண்டும். நம்முடைய இலக்கம், நேர்மையான ஆட்சியை மக்களுக்கு அளிப்பதே. மக்கள் தொண்டர்களாக இருந்து, மக்களின் சேவகராக செயல்படுவதே தவெக-வின் கோட்பாடு என்றும் இரட்டை இலச்சினை அரசியலை முடிவுக்கு கொண்டு வர, இளைஞர்கள், பெண்கள், பொதுமக்கள் அனைவரும் துணை நிற்க வேண்டும். என்றார்.இது ஒரு அரசியல் மாற்றம் அல்ல, சமூக மாற்றம்!" என்று உரையை முடித்த விஜய், 2026 தேர்தலுக்கு வலுவாக தயாராக கட்சி செயல்படும் என உறுதி அளித்தார்.

### தவெக - 2026 பயணம் வெற்றி பெறுமா?

நடிகர் விஜயின் அரசியல் பயணம், பிப்ரவரி 2025-ல் முக்கிய மைல்கல்லாக அமைகிறது. புதிய மாற்றத்திற்கான அவரது பார்வை, மக்கள் மத்தியில் அவருக்கு ஒரு வலுவான அரசியல் தலைவர் என்ற தோற்றத்தை உருவாக்கியுள்ளது. இதுவரை விஜய் வெற்றிப்படிகள் ஏறியிருக்கிறார். ஆனால், 2026-ல் விஜயின் கட்சி உண்மையான வெற்றியை பெறுமா? என்பதற்கு எதிர்காலமே பதிலாக இருக்கும்.

"நீங்கள் எனக்காக இல்லை, உங்கள் உரிமைக்காக போராடுங்கள்!"-விஜய்

# நாம் தமிழர் கட்சி தலைவர் சீமான் -
## 2025 பிப்ரவரி விசாரணைகள் & அரசியல் தாக்கங்கள்!



தமிழக அரசியலில் எப்போதும் சர்ச்சைகளில் இருக்கும் ஒரு முக்கியமான அரசியல் தலைவர் - நாம் தமிழர் கட்சி (NTK) தலைவர் செந்தமிழன் சீமான். 2025 பிப்ரவரி மாதம் அவரது பெயர் வழக்குகள், போலீஸ் விசாரணைகள், மற்றும் அரசியல் விவாதங்களில் அடிக்கடி இடம்பெற்றது. ஈரோடு இடைத்தேர்தல் பேச்சு, நடிகை விஜயலட்சுமியின் புகார், மற்றும் திமுக அரசுடன் ஏற்பட்ட மோதல்கள் ஆகியவை தமிழக அரசியல் சூழலை செருகலாக்கின.

ஈரோடு இடைத்தேர்தல் - சீமான் மீது காவல் நிலைய சம்மன்!

பிப்ரவரி 2025 - ஈரோடு மக்களவை இடைத்தேர்தல் பரபரப்பாக நடைபெற்று கொண்டிருந்தது. இந்தத் தேர்தலில் நாம் தமிழர் கட்சி வலுவாக தேர்தல் பிரசாரத்தின் போது, சீமான் தனது பொதுக்கூட்டத்தில் கொடுத்த ஒரு கடுமையான பேச்சு, அவருக்கு போலீஸ் விசாரணைக்கு அழைப்பு கிடைக்க காரணமானது.

பிப்ரவரி 17, 2025 - ஈரோடு மாநகர காவல்துறை சீமானுக்கு சம்மன் அனுப்பியதில்அவரது பேச்சில் "குண்டு எறியுங்கள்" போன்ற வார்த்தைகள் இடம்பெற்றதாக புகார் எழுந்தது. இது சட்டத்திற்கும், தேர்தல் விதிமுறைகளுக்கும் எதிராக இருக்கலாம் என்று காவல்துறையினர் தெரிவித்தனர்.

### சீமான் பதில்:

"நான் எப்போதும் நேர்மையாக பேசுவேன். என் கருத்துகளை களைய முடியாது. அரசியலுக்கு வந்த பிறகு, என்னை தடுக்க பல வழிகள் முயற்சி செய்யப்பட்டது. இது அதில் ஒன்று!"

ஈரோடு வழக்கின் அரசியல் தாக்கங்கள்:

பாஜக & அதிமுக - "சீமான் தேர்தல் விதிகளை மீறியுள்ளதால் அவர் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்."

திமுக - "இவர் தமிழர் நலனுக்காக குரல் கொடுக்கிறவர் அல்ல, வெறுப்பை தூண்டுபவர்."

நாம் தமிழர் கட்சி (NTK) - "இது அரசியல் பழிவாங்கல்!" என்று தெரிவித்தார்.

"விஜயலட்சுமி குற்றச்சாட்டு **Vs** சீமான் பதில் - 14 ஆண்டுகால சர்ச்சை 2025-ல் முடிவடையுமா?"

தமிழ் சினிமாவில் சில வருடங்களுக்கு முன்பு பரபரப்பாக இருந்த நடிகை விஜயலட்சுமி, 2011 முதல் நாம் தமிழர் கட்சி தலைவர் சீமான் மீது பல்வேறு குற்றச்சாட்டுகளை எழுப்பி வந்தார். கடந்த ஆண்டுகளில் பல முறை செய்தியாளர்களை சந்தித்து,

சீமான் தன்னை திருமணம் செய்து கொள்வதாகக் கூறி ஏமாற்றிவிட்டதாகவும், அவரது அரசியல் வலிமையை பயன்படுத்தி வழக்கை பல ஆண்டுகளாக தடுத்துவைத்துள்ளார் என்று கூறி வந்தார். இவ்விவதாதம் மீண்டும் 2025 பிப்ரவரி மாதத்தில் மையப்புள்ளியாக மாறியது.

பிப்ரவரி 28, 2025 அன்று, சென்னையில் உள்ள வளசரவாக்கம் காவல் நிலையத்தில் நடிகை விஜயலட்சுமி அளித்த புகாரின் அடிப்படையில், போலீசார் சீமான் மீது விசாரணை நடத்தினர். பல ஆண்டுகளாக நீதிக்காக போராடி வரும் தன்னை ஒடுக்க அரசியல் கும்பல்கள் கூட்டாக செயல்படுகின்றன என்றும், திமுக மற்றும் சீமான் இருவரும் ஒரே வகையான அரசியல் பிரமுகர்கள் என்றும் விஜயலட்சுமி தனது குற்றச்சாட்டுகளில் தெரிவித்தார். இவரது புகாரின் பின்னணியில் பல்வேறு அரசியல் காரணங்கள் உள்ளனவா? அல்லது இது ஒரு உண்மையான உரிமை போராட்டமா? என்ற கேள்வி எழுந்தது.

சீமான், இந்த வழக்கு முழுவதுமாக பொய்யானது என்றும், தன்னை அரசியல் ரீதியாக ஒடுக்க ஒரு திட்டமிட்ட முயற்சி நடைபெறுகிறது என்றும் தனது ஆதரவாளர்களிடம் தெரிவித்தார். அவர் மேலும், இது திமுக அரசின் ஒரு அரசியல் வேலை எனவும், வழக்கு மீது முழுமையான விசாரணை நடத்தினால் உண்மை வெளிப்படும் எனவும் கூறினார்.

இது தொடர்பாக போலீசார் விசாரணையை தீவிரமாக வழக்கு விசாரணையின் போது, 2011-ல் முதன்முதலாக இந்த புகார் பதிவு செய்யப்பட்டது, ஆனால் ஆதாரங்கள் குறைவாக இருந்ததால் சட்ட ரீதியாக நடவடிக்கை எடுக்க முடியவில்லை. 2023-ல் வழக்கு மீண்டும் ஆரம்பிக்கப்பட்டபோதும், சட்டப்பூர்வமான நிலைமைகள் காரணமாக எந்தவொரு தீர்ப்பும் கிடைக்கவில்லை.

2025 பிப்ரவரி மாதத்தில் இந்த வழக்கு மீண்டும் பரபரப்பாகியது. சில பெண்கள் அமைப்புகள் விஜயலட்சுமிக்கு ஆதரவளித்தபோதும், நாம் தமிழர் கட்சியினர் இது முற்றிலும் அரசியல் தூண்டப்பட்ட வழக்கு எனக் கூறினர். சமூக வலைதளங்களில் இதை பொறுத்தவரை இருவேறு கருத்துகள் காணப்பட்டன - சிலர் விஜயலட்சுமிக்கு ஆதரவளித்து நீதி கிடைக்க வேண்டும் என வலியுறுத்தினர், இன்னொருபுறம் சீமான் மீது தொடர்ச்சியாக நடக்கும் அரசியல் பழிவாங்கல்கள் பற்றிய விவாதங்களும் ஏற்பட்டன.

இந்த வழக்கு எங்கு முடியும்? விஜயலட்சுமிக்கு நீதி கிடைக்குமா? அல்லது இது அரசியல் காரணங்களால் உருவாக்கப்பட்ட ஒரு பிரச்சனைதானா? என்ற கேள்விகள் இந்த விவகாரத்தை மேலும் தீவிரமாக்கியுள்ளன. இந்த வழக்கின் முடிவை வரவிருக்கும் நாட்கள் தீர்மானிக்கவிருக்கின்றன.

திமுக **VS** சீமான் - அரசியல் மோதல்!

தமிழக அரசியலில் திமுக & சீமான் அடிக்கடி நேருக்கு நேர் மோதும் தலைவர்கள். 2025 பிப்ரவரியில், இந்த மோதல் உச்சத்தை எட்டியது!

### சீமான்:

"திமுக தமிழர்களுக்கான அரசு இல்லை. அவர்கள் வணிகமே செய்கிறார்கள். உண்மையான தமிழ் உணர்வை நான் தான் கொண்டுவரப்போகிறேன்!"

### திமுக:

"நாம் தமிழர் கட்சி வெறும் பரபரப்பு கட்சி. அவர்கள் வளர்ச்சியை எதிர்ப்பதற்காக மட்டும் உள்ள கட்சி!"

பிப்ரவரி 2025 சீமானுக்கு சவாலான மாதமாக அமைந்தது. ஈரோடு தேர்தல் பேச்சு, நடிகை விஜயலட்சுமி வழக்கு, திமுக அரசுடன் மோதல் - அனைத்தும் அவருக்கு புதிய சிக்கல்களை ஏற்படுத்தின.

**அடுத்த கட்டத்தில் என்ன நடக்கும்?**

**ஈரோடு வழக்கில் நீதிமன்ற தீர்ப்பு என்ன?**

**விஜயலட்சுமி வழக்கு தொடருமா?**


**ழிஜிரி அரசியலில் வலுப்பெறுமா, அல்லது எதிர்ப்புகளால் பாதிக்கப்படுமா?**

இந்தக் கேள்விகளுக்கு பதில், வரவிருக்கும் நாட்களில் தெரியும்.

தமிழக அரசியலில் சீமான் என்ன செய்யப்போகிறார் என்பது பரபரப்பாக இருக்கிறது!

Exclusive Analysis: "Seeman Vs Tamil Nadu Politics - Who Will Win?"

சீமான் மீது வரும் வழக்குகள், விசாரணைகள், மற்றும் அரசியல் தாக்கம் - இது தமிழக அரசியலில் பெரும் விவாதமாக இருக்கிறது. இனி அவர் எந்த முடிவை எடுக்கப் போகிறார்? காத்திருந்து பார்க்கலாம்!.......



# NEP 2025
# தமிழ்நாட்டின் கல்விப் போராட்டம்
## உரிமையா? கட்டுப்படுத்தலா?

**கல்வி என்பது உரிமை - அரசியல் வியாபாரம் அல்ல!**



2025 பிப்ரவரியில், தமிழ்நாட்டில் தேசிய கல்விக் கொள்கை (**NEP** 2020) மீதான பெரிய எதிர்ப்புகள் வெடித்தன. மும்மொழிக் கொள்கை, மாநில கல்வித் துறையின் சுதந்திரம், தொழிற்கல்வி - இவையனைத்தும் விவாதத்திற்குரிய பிரச்சினைகளாக மாறின.

வடசென்னையில் இந்த விவாதம் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது. அரசு பள்ளிகள், மாநகராட்சி பள்ளிகள், தனியார் பள்ளிகள் - **NEP** அமல்படுத்தப்பட வேண்டுமா? இல்லையா? என்ற கேள்விகள் எழுந்தன. மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள் - அனைவரும் கல்விப் போராட்டத்தின் ஒரு பகுதியாக மாறினார்கள்.

மத்திய அரசு **vs** தமிழக அரசு - **NEP**-யை ஏற்குமா தமிழ்நாடு?

மத்திய அரசு **NEP** 2020-யை மாநிலங்களில் கட்டாயமாக்குவதற்கு முயன்றது. இதற்காக மாநிலங்களுக்கு நிதி வழங்கும் திட்டத்தையும் மிணிறி-க்கு இணைத்து வைத்தது. தமிழ்நாடு அரசு **NEP**-யை நிராகரித்தாலும், மத்திய அரசு **NEP**-யை ஏற்காவிட்டால் ரூ.5,000 கோடி வரை நிதி இழக்க நேரிடும் என்று எச்சரித்தது.

முதல்வர் மு.க.ஸ்டாலின் பதிலளித்தார்: "தமிழகத்தின் கல்வி முறை தனித்துவமானது. எந்தவொரு வெளியாட்டாலும் அதை மாற்ற முடியாது!"

**NEP**-யில் மும்மொழிக் கொள்கை கட்டாயமாக்கப்பட்டது. அதாவது, மாணவர்கள் தமிழ் + ஆங்கிலம் தவிர மூன்றாவது மொழியை தேர்வு செய்ய வேண்டும். இந்தி, சான்ஸ்கிருத், அல்லது பிற மாநில மொழிகள் இதில் இடம்பெற்றன.

தமிழ்நாடு அரசின் நிலைப்பாடு தெளிவாக இருந்தது:

"தமிழகத்தில் இருமொழிக் கொள்கையே போதும். மும்மொழிக் கொள்கை தேவையில்லை!"

**"NEP** மூலமாக மத்திய அரசு மாநில கல்வித் துறையை கட்டுப்படுத்த முயல்கிறது!"

"தமிழ்நாட்டின் கல்வி அமைப்பை தேசிய கொள்கைகளால் மாற்றப்பட முடியாது!

தமிழ்நாடு அரசு **NEP**-க்கு மாற்றாக ரூ.2000 கோடி ஒதுக்கீடு!

மத்திய அரசு **NEP**-யை ஏற்காவிட்டால் தமிழ்நாடு ரூ.2152 கோடி நிதியை இழக்கும் என்ற தகவல் வெளியானது. ஆனால், முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் **NEP**-யை நிராகரித்து, அதற்குப் பதிலாக மாநில கல்வித் துறைக்கே ரூ.2000 கோடி ஒதுக்கீடு செய்வதாக அறிவித்தார்.

"நாம் கல்வியை விற்பனைக்கு விட முடியாது. மத்திய அரசு நிதி தராது என்பதால், நம்மால் முடிந்ததை நாமே செய்யப்போகிறோம்!" - முதல்வர் ஸ்டாலின்

இந்த முடிவு தமிழ்நாட்டின் கல்வி துறையில் முக்கியமான அரசியல் மாற்றமாக மாறியது.

**NEP** எதிர்ப்பு - அரசியல் விளைவுகள்

தமிழக அரசியல் வட்டாரங்களில் இது பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது.

திமுக - "**NEP** தமிழ்நாட்டிற்கு பொருத்தமற்றது."

அதிமுக - "மத்திய அரசு கல்வித் துறையில் தலையிடக்கூடாது."

### பாஜக - "NEP மாணவர்களுக்கு புதிய வாய்ப்புகளை தரும்!"

**NEP** விவாதம் தமிழகத்தில் நெருப்பு பற்றிய அரசியல் விவாதமாக மாறியது.

**NEP** எதிர்ப்பு - மக்கள் கருத்து என்ன?

"நாங்கள் தமிழ்நாட்டில் பிறந்தோம். தமிழ் & ஆங்கிலம் போதும். மூன்றாவது மொழி தேவையில்லை!"

"நாங்கள் அரசு பள்ளியில் படிக்கிறோம். பள்ளிகளில் அடிப்படை வசதிகள் கூட இல்லை. **NEP** தேவையா?"

"மத்திய அரசு கல்வி உரிமையை மாநிலங்களிடம் விட்டுவைக்க வேண்டும்!"

இது ஒரு கல்விப் போர்!

2025 பிப்ரவரி - தமிழ்நாட்டின் கல்வி வரலாற்றில் மறக்க முடியாத மாதம்!

### NEP-யை ஏற்குமா தமிழ்நாடு?

தமிழர் கல்வி உரிமையை தமிழக அரசு பாதுகாக்குமா?

🔥 இந்தக் கல்விப் போராட்டம் தொடருமா? **NEP**-க்கு எதிராக தமிழக அரசு நிலைப்பாட்டை உறுதி செய்யுமா?



# உதயநிதி ஸ்டாலின் Vs அண்ணாமலை

## தமிழக அரசியலை அதிரவைத்த நேரடி மோதல்!





தமிழக அரசியலில் திமுக **Vs** பாஜக மோதல் என்பது புதிதல்ல. ஆனால் 2025 பிப்ரவரியில், உதயநிதி ஸ்டாலின் மற்றும் அண்ணாமலை நேரடியாக மோதிய விஷயம் புதிய பரபரப்பை ஏற்படுத்தியது. இருவரும் தங்கள் கட்சிகளில் முக்கியமான இளைய தலைவர்கள். அவர்களின் வார்த்தை போராட்டம், வெறும் அரசியல் மோதலாக இல்லாமல், மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் இடையேயான பெரிய விவாதமாக மாறிவிட்டது.

அனைத்தும் பிப்ரவரி 18, 2025 அன்று தொடங்கியது. சென்னையில் மத்திய அரசை எதிர்த்து திமுக கூட்டணி கட்சிகள் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தினர். இந்த கூட்டத்தில் உதயநிதி ஸ்டாலின், "மோடி மீண்டும் தமிழகத்திற்கு வந்தால், இந்த முறை '**Go Back Modi**' கிடையாது, 'Get Out Modi' இருக்கும்!" என்று திட்டவட்டமாக கூறினார். இதற்கான பதிலடி அடுத்த நாளே வந்தது. கரூரில் நடந்த பாஜக கூட்டத்தில், அண்ணாமலை "உதயநிதி அவர்களின் வாயில் தைரியம் இருந்தால் 'Get Out Modi' என்று சொல்லட்டும். இல்லையெனில், அவருக்கு நான் போஸ்டர் ஒட்டிவிடுவேன்!" என்று கூறினார். இதனால், இந்த வார்த்தைப் போர் இன்னும் தீவிரமானது.

### "நீங்க வரச்சொல்லுங்க, நானே வர்றேன்!" - அண்ணா சாலை சந்திப்பு நடக்குமா?

இருவரும் நேரடியாக சந்தித்து விவாதிக்க தயாரா? என்ற கேள்வி எழுந்தது. பிப்ரவரி 20, 2025, சென்னையில் செய்தியாளர்களை சந்தித்த உதயநிதி, "அண்ணாமலை சவால் விடுகிறாரா? சரி, அவரை அண்ணா சாலைக்கு வரச்சொல்லுங்கள்! தைரியம் இருந்தால், வந்து என்னை நேரில் சந்திக்கட்டும்!" என்று உரிமையுடன் கூறினார். இதற்குப் பதிலாக, அண்ணாமலை சேலத்தில் நடந்த கூட்டத்தில், "நான் அடுத்த வாரம் சென்னைக்கு வருகிறேன்! திமுகவினர் அண்ணா சாலையில் எந்த இடம் என்று சொன்னா, நான் ஒருவன் மட்டும் வருகிறேன்! திமுகவினர் எல்லா படைகளையும் திரட்டி என்னைத் தடுத்து நிறுத்தட்டும்!" என்று பதிலடி கொடுத்தார். இந்த மோதல் மாநில அளவிலிருந்துவிட்டு, மத்திய அரசையும் சென்றடைந்தது.

### 'Get Out Modi' Vs 'Get Out Stalin' - பிரச்சாரம் சூடுபிடித்தது!

பிப்ரவரி 21, 2025, தமிழக அரசியலில் முக்கிய திருப்பமாக அமைந்தது. உதயநிதி ஸ்டாலின், மோடியை எதிர்த்து "**Get Out Modi**" என கூறியதை தொடர்ந்து, சமூக வலைதளங்களில் திமுக ஆதரவாளர்கள் இந்த ஹாஷ்டேக்கை பிரபலமாக்கினர். தமிழ்நாட்டில் **Twitter (X), Facebook, Instagram** போன்ற சமூக வலைதளங்களில் **#GetOutModi** ட்ரெண்டிங் ஆகியது. இதற்கு பதிலளிக்க பாஜகவினரும் மைக்கை பிடித்தனர். அண்ணாமலை முன்னணியில் இருந்து,



**#GetOutStalin** என்ற புதிய ஹாஷ்டேக்கை உருவாக்கினர்.இந்த பிரச்சாரம் மிகப்பெரிய அரசியல் விவாதமாக மாறியது. தமிழகத்திலும் தேசிய அரசியலிலும் இது பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. திமுகவின் ஆதரவாளர்கள், "மோடி மீண்டும் தமிழர்களின் உரிமைகளை பறிக்க வந்தால், தமிழக மக்கள் அவரை துரத்துவார்கள்!" என வாதிட்டனர். அதே சமயம், பாஜகவினர், "திமுக அரசு தமிழகத்தை தனியாக ஒரு தீவாக மாற்றி, மத்திய அரசின் எந்த திட்டத்தையும் ஏற்க மறுக்கிறது. இது நாட்டிற்கு பாதகமானது!" என எதிர்த்தனர். இந்த ட்ரெண்ட்கள் அரசியல் ரீதியாக மேலும் தீவிரமான நிலையை உருவாக்கின. பாஜகவினர் "நாடு ஒரு இந்தியாவாக இருக்க வேண்டும், மாநில அரசியலில் பிரிவினைபோக்கை தூண்டும் அரசியல் எங்களுக்கு எதிராக இருக்கிறது!" என்று வலியுறுத்தினர். இதற்குப் பதிலளித்த திமுக ஆதரவாளர்கள், "தமிழகத்தின் உரிமைகளை நாம் காப்பாற்றவேண்டும். மத்திய அரசு தமிழ்மொழி, கல்வி, வேலைவாய்ப்பு போன்ற விஷயங்களில் தமிழகத்துக்கு எதிராக செயல்படுகிறது!" என கண்டனம் தெரிவித்தனர்.

தொடர்ந்து, இந்த பிரச்சாரத்தால், தமிழக அரசியலில் வார்த்தைப் போர் மட்டுமல்ல, சமூக வலைதளங்களில் **"Get Out Modi"** மற்றும் **"Get Out Stalin"** - இந்த இரண்டு ஹாஷ்டேக்குகளும் இந்திய அரசியல் வரலாற்றில் ஒரு புதிய அரசியல் தாக்கத்தை உருவாக்கியிருக்கின்றன.

## பிப்ரவரியில் வெடித்த அரசியல் மோதல்!

உதயநிதி மற்றும் அண்ணாமலை இடையேயான இந்த வார்த்தைப் போர், தமிழக அரசியலில் புதிய பரபரப்பை உருவாக்கியுள்ளது. சமூக வலைதளங்களில் **"Get Out Modi" Vs "Get Out Stalin"** பிரச்சாரம் மக்கள் மத்தியில் பெரும் விவாதமாக மாறியது. இது வெறும் அரசியல் வாக்குவாதமா, அல்லது 2026 தேர்தலுக்கு முன்னோட்டமா? என்பது காலமே சொல்லும். ஒருவேளை, இந்த மோதல் இருவரையும் தமிழக அரசியலின் முக்கியமான தலைவர்களாக உருவாக்கும் ஒரு கட்டமாகவும் இருக்கலாம்!



## திமுக கழிப்பறை திட்டம்

# ₹82 கோடியில் தொடங்கிய திட்டம், ஊழல் சர்ச்சை ஆகிவிட்டதா?

சென்னை நகரின் பொது கழிப்பறைகளை நவீனமயமாக்கும் ₹82 கோடி மதிப்பிலான திட்டம், இப்போது சர்ச்சை மற்றும் **RTI** போட்ட தகவல்களால் சூடுபிடித்திருக்கிறது. சென்னை மாநகராட்சி (**GCC**) இதை **RSP Infra** என்ற தனியார் நிறுவனத்துக்கு ஒப்பந்தமாக அளித்தது. ஆனால், இந்த திட்டத்தின் செயல்பாடு, செலவு கணக்கீடு, பராமரிப்பு - அனைத்தும் கேள்விக்குறியாக மாறிவிட்டது. இருப்பினும்,பொதுமக்கள் பயன்பாட்டுக்காக 662 புதிய கழிப்பறைகள் கட்டும் திட்டம், முதல் ஆண்டிலேயே கடுமையான விமர்சனங்களுக்கு உள்ளாகியது. இந்த திட்டம் செயல்படுத்தப்பட்ட முதல் ஆண்டு, 372 **CCTV** கேமராக்கள் பொருத்த வேண்டிய திட்டத்தில், வெறும் 37 மட்டுமே பொருத்தப்பட்டதாக **RTI** தகவல்கள் தெரிவிக்கின்றன. இது பணியாளர்களை கண்காணிக்க முடியாமல் வைத்ததோடு, சுத்தம் மற்றும் பராமரிப்பிலும் பெரும் குறைபாடுகளை ஏற்படுத்தியது.



## “₹364 செலவாகும் ஒரு கழிப்பறை இருக்கை?“

- எதிர்க்கட்சிகள் கேள்வி எழுப்புகின்றன!

இந்த திட்டத்தில் ஒவ்வொரு கழிப்பறை இருக்கைக்கும் ₹364 வரை செலவாகும் என்கிறது **RTI** பதில். ஆனால், பொதுவாக கூடுதல் தரத்துடன் பராமரிக்கப்படுகிற கழிப்பறைகளுக்கே ₹100 - ₹150 மட்டுமே செலவாகும் என்கிறது **Chepauk Stadium** பாராமரிப்பில் ஈடுபட்டுள்ள **Penta Pvt Ltd.** தலைநகர் பொதுமக்களுக்கு மொத்தமாக ₹82 கோடி செலவிட்டதற்குப் பிறகும், தூய்மையான கழிப்பறைகள் கிடைக்காமல் பராமரிப்பு கோளாறுகள் தொடர்கின்றன.

## “ஒப்பந்த துறவி, நகராட்சி நடவடிக்கை எடுக்கவில்லையா?“

**RTI** தகவல்கள் வெளிச்சத்திற்கு வந்த பிறகும், **GCC** ஏன் ஒப்பந்ததாரருக்கு கடுமையான நடவடிக்கை எடுக்கவில்லை என்பது இன்னும் பலருக்கும் குழப்பமான விஷயமாகவே உள்ளது. முன்கூட்டியே பணிநீக்கம் செய்யும் நோட்டீஸ் வெளியிட்டதாக கூறியிருந்தாலும், ஏற்கெனவே ₹24 கோடி ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்டுவிட்டது.

சிசிடிவி கேமராக்கள், தூய்மை தரம், சரியான பராமரிப்பு - அனைத்தும் கேள்விக்குறியாக மாறிய நிலையில், இந்த திட்டம் ஊழல் பிரச்சனைக்குள் சிக்கியது என்றே எதிர்க்கட்சிகள் குற்றஞ் சாட்டுகின்றன.

## "DMK Toilet Contract - ஊழல் அமைக்கிறதா?“

முன்னதாக, சென்னை மாநகராட்சி இந்த திட்டத்தை நகரை நவீனமயமாக்கும் ஒரு முயற்சியாக விளக்கியது. ஆனால், கண்காணிப்பு மற்றும் பணிநிலையோசனை முற்றிலும் தோல்வியடைந்திருக்கிறது. இதனால், இந்த திட்டம் உண்மையில் மக்களுக்கு பயனாக அமையுமா? அல்லது இது அரசியல் லாபத்திற்காக நடைபெற்ற திட்டமா? என்ற கேள்வி எழுகிறது.**DMK Toilet Contract** - மக்கள் வசதிக்கா? அரசியல் லாபத்துக்கா?

சென்னை நகரத்தின் முக்கிய பகுதி முழுவதும் அமைக்கப்பட்ட இந்த கழிப்பறைகள், தூய்மையாகவும், பாதுகாப்பாகவும் பராமரிக்கப்பட வேண்டியவை. ஆனால், ₹82 கோடியும் செலவாகி, ஏற்கனவே ₹24 கோடி கொடுக்கப்பட்ட பிறகும், முடங்கிய பணிகள், வீணான செலவுகள், மற்றும் கண்காணிப்பு கோளாறுகள் - எல்லாம் இந்த திட்டத்தை அரசியல் சர்ச்சைக்குள் தள்ளிவிட்டது.




# டிரம்பின் முடிவுகள் அமெரிக்கா –

# அரபு நாடுகளுக்கு இடையே இந்தியாவை சிக்க வைத்துவிட்டதா?

**டொனால்ட் டிரம்ப் அமெரிக்க அதிபர் தேர்தலில் வெற்றி பெற்றதும், அவரது வருகை அமெரிக்காவின் கொள்கைகளில் மாற்றங்களை கொண்டுவரும் என அனைவரும் நம்பிக்கை கொண்டனர். அந்த மாற்றங்கள் தற்போது வெளிப்படத் தொடங்கியிருக்கின்றன எனலாம். சர்வதேச உறவுகள் என்பது நீண்ட காலத்திற்கானவை. அதாவது கொள்கைகளும், திட்டங்களும் ஒரே நாளிலோ, மாதத்திலோ மாறாது, என்று பொதுவாக கருதப்படுகிறது. ஆனால் கடந்த வாரத்தில் நடந்த நிகழ்வுகள் சர்வதேச அளவில் பல மாற்றங்களை சுட்டிக்காட்டுகின்றன. இவற்றை புரிந்து கொள்வதற்கான முயற்சிகள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. இந்தியாவின் கண்ணோட்டத்தில், பிரதமர் நரேந்திர மோதி அண்மையில் அமெரிக்கா சென்று திரும்பிய பிறகு, கத்தார் மன்னர் ஷேக் தமின் பின் ஹமத் அல்-தானி இந்தியாவிற்கு வந்தார்.**

## கத்தாருடனான இந்தியாவின் உறவு பாதிக்குமா?


பிப்ரவரி 17ஆம் தேதி இரவு கத்தார் மன்னர் ஷேக் தமிம் பின் ஹமாத் அல் தானி இந்தியாவிற்கு வந்த போது அவரை வரவேற்க பிரதமர் நரேந்திர மோதி புது டெல்லி விமான நிலையத்திற்கே சென்றார். இந்தியா மற்றும் கத்தார் இடையே பாரம்பரியமாக ஆழமான உறவுகள் இருந்திருக்கின்றன. இரு நாடுகளிடையேயான தூதரக உறவுகள் 1970-களில் தொடங்கின. எல்என்ஜி எனப்படும் திரவமாக்கப்பட்ட இயற்கை எரிவாயு, எல்பிஜி எனப்படும் திரவமாக்கப்பட்ட எரிவாயு, ரசாயனங்கள், பெட்ரோகெமிக்கல்ஸ், உரம், பிளாஸ்டிக் மற்றும் அலுமினியம் போன்றவற்றை கத்தார் இந்தியாவிற்கு ஏற்றுமதி செய்கிறது. அண்மையில் பிரதமர் நரேந்திர மோதி அமெரிக்காவிற்கு மேற்கொண்ட பயணம் இந்தியா மற்றும் கத்தார் என இரண்டு நாடுகளுக்குமே சவாலாக மாறியுள்ளது. இந்த பயணத்தின் போது, இந்தியா மற்றும் அமெரிக்கா இடையே பல ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டன வர்த்தக பற்றாக்குறையை குறைப்பதற்கு உதவும் வகையில் இந்தியா இனி அமெரிக்காவிடம் அதிக எண்ணெய் மற்றும் எரிவாயுவை வாங்கும் என அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் தெரிவித்தார். இந்தியாவுக்கு எண்ணெய் மற்றும் எரிவாயு அதிகம் ஏற்றுமதி செய்யும் நாடாக அமெரிக்கா மாறும் என டிரம்ப் நம்பிக்கை தெரிவித்தார். இந்த சூழ்நிலையில், இந்தியா கத்தாரில் இருந்து இயற்கை எரிவாயுவை இறக்குமதி செய்தால், அமெரிக்காவுடன் எப்படி நல்லுறவை பராமரிக்க முடியும்? இயற்கை எரிவாயு வாங்க இந்தியா, அமெரிக்காவின் பக்கம் திரும்பிகின்றன.



# இந்தியா மற்றும் கத்தார் இடையேயான உறவின் மீதான தாக்கம் என்னவாக இருக்கும்?

இதுகுறித்து அமெரிக்காவின் டெலாவேர் பல்கலைக்கழக பேராசிரியார் முக்தாதர் கான்,"கத்தாரில் உளவு பார்த்ததாக 8 இந்தியர்கள் கைது செய்யப்பட்ட போது, அவர்களுக்கு மரண தண்டனை வழங்கப்பட்டிருந்தாலும் நரேந்திர மோதியின் தனிப்பட்ட ராஜ தந்திரத்தால் கத்தார் அவர்களை திருப்பி அனுப்பியதாக இந்தியாவில் பேசப்பட்டது. ஆனால் 78 பில்லியன் டாலர் அளவு இயற்கை எரிவாயுவை கத்தாரிடமிருந்து வாங்குவதற்கான ஒப்பந்தத்தையும் இந்தியா கையெழுத்திட்டிருந்தது." என்றார். 'இப்போது இந்தியா அமெரிக்காவிடமிருந்து இயற்கை எரிவாயுவை வாங்கினால், தங்களுடனான ஒப்பந்தம் எந்த வகையில் பாதிக்கப்படும் என கத்தார் கவலைப்படக் கூடும்," என்கிறார் அவர் முக்தாதர் கான்,"தங்களுடனான ஒப்பந்தம் தொடர்வதை உறுதி செய்து கொள்ளவே ஷேக் அல் தானி டெல்லி வந்தார் என நான் நினைக்கிறேன்" என்கிறார் எல்என்ஜி வழங்குவதில் இந்தியாவுக்கு கத்தார் ஒரு முக்கியமான நாடு என்கிறார் மிடில் ஈஸ்ட் இன்சைட்ஸ் நிறுவனர் சுபதா சௌத்ரி,





இந்த விவகாரத்தில் ஒவ்வொரு நாடும், அனைத்து நாடுகளுடன் நல்லுறவை பராமரிக்க விரும்பும் உலகில் நாம் இருக்கிறோம். இந்தியா அனைத்து நாடுகளுடனும் நல்ல உறவை பேண விரும்புகிறது. நாம் இப்போது முக்கியமான, தீர்க்கமான கட்டத்தில் நுழைகிறோம்" என்கிறார்கள் "வரும் நாட்களில் டிரம்பின் கொள்கைகள் என்னவாக இருக்கும் என்பதை சொல்ல முடியாது என்பதால் அவரைப் பற்றி எதுவும் சொல்வது கடினமானது எதிர்காலத்தில் மேலும் பல பயன்களைப் பெற இந்தியா அனைத்து நாடுகளுடனும் நல்ல உறவை பராமரிக்க முயற்சி செய்கிறது "என்கிறார் அவர். "கத்தார் அதிக அளவில் எல்என்ஜி வழங்கும் நாடு என்றால், இந்தியா அதை வாங்கும் முக்கிய நாடு" என்பது கருத்தாக உள்ளன.

# டிரம்ப் உலகிற்கு என்ன சொல்ல நினைக்கிறார்?

டிரம்ப் அண்மையில் எடுத்த இரண்டு முடிவுகள் குறித்து உலகம் முழுவதும் சூடான விவாதங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன முதலாவது ரஷ்ய யுக்ரேன் யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவர ரஷ்ய அதிபர் புதினிடம் டிரம்ப் மென்மையான போக்கை கடைபிடிக்கிறார். இரண்டாவது காஸா நெருக்கடியை சமாளிக்க காஸாவின் மொத்த மக்களையும் வேறு இடத்திற்கு மாற்ற வேண்டும் என்கிற திட்டத்தை டிரம்ப் முன்வைத்துள்ளார்.

புதினிடம் மென்மையான போக்கை கடைபிடிப்பது ஐரோப்பாவில் குழப்பத்தையும், அமைதியின்மையையும் ஏற்படுத்தியுள்ளது. காஸா மக்களை வேறு நாடுகளுக்கு மாற்றும் திட்டம் மத்திய கிழக்கு நாடுகளின் இதயத்துடிப்பை அதிகரிக்கச் செய்துள்ளது. பதவியேற்றது முதலே டிரம்ப் உலகை அதிர்ச்சிக்குள்ளாக்கிய பல முடிவுகளை எடுத்துள்ளார். ஆனால் தேர்தலின் போதே "அமெரிக்காவுக்கு முன்னுரிமை" என்ற தனது கொள்கையை அவர் தெளிவுபடுத்தியிருந்தார். ஆனால் இப்போது, ஒவ்வொரு நாளும் பெரிய முடிவுகளை எடுத்த பிறகு அவர் இந்த உலகிற்கு சொல்ல விரும்பும் செய்தி என்ன என்ற கேள்வி எழுகிறது. " கடந்த முப்பத்து-நாற்பது ஆண்டுகளில் சர்வதேச கட்டமைப்புகளுக்கு அமெரிக்கா அளித்த ஆதரவை மற்ற நாடுகள் அநியாய ஆதாயம் பெறுவதற்கு பயன்படுத்தியுள்ளன. உதாரணத்திற்கு 1990 முதல் சீனா வேகமாக வளர்ந்துள்ளது. அதே நேரம் அமெரிக்காவில் தொழில்மயமாக்கல் குன்றியுள்ளது, அமெரிக்கா அனைவருக்கும் உதவியது. ஆனால் மற்ற நாடுகள் அதனால் ஆதாயம் மட்டுமே பெற்றுக்கொண்டன என டிரம்ப் நம்புகிறார் " என்று கூறினார்.மேலும், "சீனா மற்றும் அமெரிக்காவின் உள் கட்டமைப்பை ஒப்பிட்டால், தற்போது அமெரிக்கா பின்தங்கியிருப்பது போல் தோன்றுகிறது. மேலும் "ஐரோப்பாவின் பாதுகாப்பிற்கு அமெரிக்கா பங்களிக்கிறது. இதன் காரணமாக, ஐரோப்பா தனது பாதுகாப்பிற்கு






இரண்டு விழுக்காடுக்கும் குறைவாகவே செலவு செய்துவிட்டுஎஞ்சிய பணத்தை அதன் வளர்ச்சிக்கும் நலத்திட்டங்களுக்கும் செலவிடுகிறது. அங்கு இலவச கல்வியும், இலவச சுகாதார சேவைகளும் உள்ளன இவை அமெரிக்காவில் இல்லை." என்று அவர் கட்டிக்காட்டுகிறார் "டிரம்ப்பின் அணுகுமுறை ராஜ ரீக அடிப்படையில் சரியற்றதாக இருக்கலாம். ஆனால் அவரது கொள்கைகள் தீவிரமானவை. உலகம் அவற்றை ஏற்றுக்கொண்டு. அதற்கு ஏற்ப நடந்து கொள்ள வேண்டும்," என்கிறார்கள். "தொழில்நுட்பம், கண்காணிப்பு மற்றும் சைபர் போர் போன்றவற்றை பார்த்தால், அமெரிக்கா வெகுவாக முன்னிலையில் உள்ளது என்பதால் அதை எதிர்ப்பது சற்று கடினமானது. அமெரிக்க பொருளாதாரத்தை சீனா, ஜெர்மனி மற்றும் பிரான்ஸின் பொருளாதாரங்களுடன் ஒப்பிட்டால் அமெரிக்காவின் மொத்த உள்நாடு உற்பத்திதான் மிக அதிகம் "ஒவ்வொரு நாட்டுடனும் அமெரிக்காவின் அமைப்புகளுடன் தொடர்பு ஏற்படுத்தப்பட்டு இருப்பதாக மத்திய கிழக்கில் அடிக்கடி சொல்லப்படுகிறது. தற்போது டிரம்பின் செல்வாக்கு அதன் உச்சத்தில் உள்ளது. ஆனால் அவரது செல்வாக்கு நீண்டகாலம் நீடிக்காது."பலரும் எதிர்பார்க்கின்றனர்.

## மோதி-டிரம்ப் சந்திப்பில் மறைமுக செய்தி என்ன?

இந்திய பிரதமர் நரேந்திர மோதியை சந்திப்பதற்கு சுமார் 2 மணி நேரத்திற்கு முன் அனைத்து நாடுகள் மீதும் பதில் வரி விதிக்கப்படும் என அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் அறிவித்தார். பிப்ரவரி 13, வியாழக்கிழமை பதில் வரி விதிக்க திட்டமிடும் ஓர் ஆவணத்தில் டிரம்ப் கையெழுத்திட்டார். நரேந்திர மோதி வெளிநாடுகளுக்கு பயணம் செய்யும் போது சிறு விஷயங்களுக்கு கூட அதிக முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. உதாரணமாக பிரான்ஸில் அதியர் மக்ரோன் அவரை கௌரவித்தார் அல்லது ஷேக் அல்-தானியை நரேந்திர மோதி விமான நிலையத்திலேயே வரவேற்றார். இது போன்ற சிறு நிகழ்ச்சிகளுக்கு கூட கூடுதல் கவனம் செலுத்தப்படுகிறது" என்கிறார். "இந்திய அரசு டொனால்ட் டிரம்ப் குறித்து சிறிது பதற்றமடைந்திருப்பதாக நினைக்கிறேன். மோதி அமெரிக்காவிற்கு செல்லும் முன்பே. டிரம்ப் பல நடவடிக்கைகளை எடுத்திருந்தார்." என்கிறார் அவர். "டொனால்ட் டிரம்ப் மற்றும் நரேந்திர மோதி இடையேயான சந்திப்பில் டிரம்ப் மோதியை சிறந்த தலைவர் என கூறியது நல்ல விஷயம் ஆனால், இந்த சந்திப்பிற்கு சில மாணி நேரங்களுக்கு முன்னர் டிரம்ப் பல முக்கிய முடிவுகளை எடுத்திருந்தார். உதாரணமாசு அவர் அனைத்து நாடுகள் மீதும் பதில் வரியை விதித்திருந்தார். இந்தியாவிற்கு எந்த விலக்கும் அவர் அளிசுவில்லை" என்கிறார்.


EPIC TOYOTA
ADVENTUROUS
ACCOMPLISHED
Awesome
HILUX
EPIC TOYOTA
MOUNT ROAD,CHENNAI | VYASARPADI, CHENNAI
9500007575 | 9500007979




TIMES OF REPUBLIC TAMIL MONTHLY RNI. NO: TNTAM/2022/82294
Owned Published and printed by C.NAVIN PRAKASH, Published from NO,33 PRINCE VILLAGE APTMS, PHASE 2 BLOCK NO C15, DOOR NO.303 ILAIYA MUDALI STREET TONDIARPET, CHENNAI-.600081. & printed at SEKAR OFFSET PRINTERS, No.168/50, BIG STREET, CHEPAUK, Chennai - 600 005. Editor C.NAVIN PRAKASH